செ.வெ.எண்:385/2009(செமதொஅ) நாள். 10.11.2009

# செங்கல்பட்டு அரசு பரனூர் மறுவாழ்வு இல்லத்தில் வசிக்கும் 293 நபர்களுக்கு உயிர் காக்கும் உயர் சிகிச்சைக்கான கலைஞர் காப்பீடு திட்டத்தினை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன், மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் திரு.கீதா ஜீவன் ஆகியோர் தொடங்கி வைத்தார்கள்

ஏழை எளிய மக்களுக்கு தமிழ்நாடு அரசால் உயிர்காக்கும் உயர் சிகிச்சைக்கான கலைஞர் காப்பீட்டு திட்டம் துவக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகிறது. காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு அடுத்த பரனூர் அரசு மறுவாழ்வு இல்லத்தில் வசிக்கின்ற 293 நபர்களுக்கு உயிர் காக்கும் உயர் கிசிச்சைக்கான கலைஞர் காப்பீடு திட்டத்தின்கீழ் புகைப்படம் எடுக்கும் பணி துவக்கப்பட்டது. இந்த பணியினை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன், மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் திருமதி.கீதாஜீவன் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அ.நம்பிராசன் ஆகியோர் கலந்து கொண்டு துவக்கி வைத்தார்கள்

இத்திட்டத்தில் சேரவிரும்பும் ஊனமுற்றோர் நலவாரிய உறுப்பினர்கள் மற்றும் இதர அமைப்புசாரா தொழிலாளர் நலவாரிய உறுப்பினர்கள் அனைவரும் அவரவர் பதிவு அட்டை மற்றும் குடும்ப அட்டையுடன் கிராமங்களில் நடக்கும் முகாம்களில் கலந்து கொண்டு, கலைஞர் காப்பீட்டு திட்டத்தில் சேர்ந்து அடையாள அட்டை பெற்று பயன்பெறலாம்.

இந்நிகழ்ச்சியில் அரசு மறுவாழ்வு இல்ல தலைமை கண்காணிப்பாளர் (பொ) டாக்டர்.என்.ஜெயந்தி, செங்கல்பட்டு வருவாய் கோட்ட அலுவலர் செல்வி.பத்மஜாதேவி, மாவட்ட ஊனமுற்றோருக்கான மறுவாழ்வு அலுவலர் திரு.எஸ்.மனோகரன், அரசு மறுவாழ்வு இல்ல நிர்வாக அலுவலர் திருமதி.சே.மங்களம், கூடுவாஞ்சேரி பேரூராட்சி தலைவர் திரு.எம்.கே.தண்டபாணி மற்றும் வீராபுரம் ஊராட்சி தலைவர் திருமதி.மோகனா ஜுவாநந்தம், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அரசுத்துறை அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

செய்தி வெளியிடுபவர்,

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம்